# இல. தமிழர் முற்றாக வெளியேற்றப்படவேண்டும்

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் இந்திய மண்ணிலிருந்து அடியோடு இலங்கைக்கு திருப்பி அனுப்பவேண்டுமென ஜனாதிபதி திரு. வெங்கட்ராமனுக்கு தாம் முறையிடப் போவதாக, தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்கட்சித்தலைவர் திரு: வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 | வைகாசி 9 | துல்ஹஜ் 8 | இதழ்: 102

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 23-5-1991

## இலங்கைக்கும் தொடர்புண்டு?

(லண்டன்)

திரு: ராஜீவின் கொலைக்கும் இலங்கையில் பல தரப்புக்குமிடையே கூட தொடர்பிருக்கலாமென பி. பி. ஸி. தெரிவித்தது. தேர்தலில் காங்கிரஸ் ஜெயித்து பிரதமராக திரு: ராஜீவ்காந்தி வருவது இலங்கைக்கு பாதகமாக இருக்கலாமெனக் கருதப்பட்டது:

இதனால் ராஜீவின் கொலை

[4ம் பக்கம் பார்க்க]

## மூடிய பேழையில் சடலம்

[புதுடில்லி]

தலைப் பகுதியற்ற நிலையில் இடுப்புக்குமேலே மிகமோசமாக சிதைந்த நிலையிலே ராஜீவின் சடலம் இரத்தம் தோய்ந்த ஆடையுடன் 'ஸ்ரெச்சரில்' உடனடியாக வான் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்டது.

தற்போது தீன்மூர்த்தி பவனிலிருக்கும் பூதவுடல் மூடப்பட்ட பேழையினுள் இந்திய தேசியக்கொடியும், காங்கிரஸ் கொடியும் போர்த்தப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

● பூவுக்குள் பூகம்பம்

# பெண் தற்கொலைப்படை தாக்கி

# ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார்!



## வெள்ளிக்கிழமை இறுதிக்கிரிகை

[சென்னை]

இந்திய முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, இனந்தெரியாத பெண் தற்கொலைப்படையினரால் குண்டு வெடிக்க வைக்கப்பட்டே கொல்லப்பட்டதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குண்டு வைக்கப்பட்ட பூச்செண்டு ராஜீவுக்கு வழங்கப்பட்டு இது வெடிக்கவைக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: பொதுமக்களிடமிருந்து மாலைகளை பெற்றுக் கொண்டு வந்த ராஜீவ், அவர் வந்த பாதையில் நின்ற இரு இளம் பெண்களில் ஒருவரிடமிருந்து அழகிய பெரிய பூச்செண்டை மரியாதையுடன் பெற்று தலையின் பின்புறமாகத் தோளுக்கு மேலால் தமது மெய்ப்பாதுகாவலரிடம் கொடுக்க நீட்டியபோது அவரின் தலைக்குப் பின்னாலும் மெய்ப்பாதுகாவலருக்கு முன்னாலும் குண்டு வெடித்தது:

## தலை வெடித்துச் சிதறியது

ராஜீவ் காந்தி, தலையும், இடுப்புக்கு மேல் உடலும் சிதறிக் கொல்லப்பட்டார். அந்த இடத்தில் அடையாளம் தெரியாத ஒரு பெண்ணின் சடலமும் காணப்பட்டது. இந்த பெண்ணின் பாவாடைக்குள் பிரிட்டனில் செய்யப்பட்ட பட்டறியும், வெடிமருந்துக்கருவியும் சொருகப்பட்டிருந்தது பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து இந்தப் பெண்தான் அந்த வெடிகுண்டை இயக்கி வெடிக்க வைத்திருக்க வேண்டுமென பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

## அவயவங்கள் துண்டிப்பு

இந்தக் குண்டுவெடிப்பில் அந்தப் பெண்ணின் தலை துண்டிக்கப்பட்டு மேடையின் பின்புறம் விழுந்ததாயும், இரு கைகளும் துண்டிக்கப்பட்டு 25 அடி தூரம் தள்ளி வீழ்ந்திருந்ததாகவும் நேரில் பார்த்த ஏ. ஐ ஆர். செய்தியாளர் தெரிவித்தார்.

## இரு பெண்களும் தெற்கு நோக்கி

கூட்டம் நடைபெறுவதாக இருந்த இடத்திற்கு அருகே காரில் இருந்து இறங்கிய திரு. ராஜீவ் காந்தி ஏழெட்டு மாலைகளையும், பொன்னாடைகளையும் பெற்றுக் கொண்ட பின்னர் ஒரு பெண் உட்பட இரண்டு பேர் கொடுத்த இரண்டு மல்லிகைப்பூ கூடைகளைப் பெற்றுக் கொண்டபோது குண்டு வெடித்தது.

இவ்வாறு திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்:

ராஜீவ் காந்தியுடன் நேற்று முன்தினம் பயணம் செய்திருந்த இவர், தான் நேரில் கண்டதை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மல்லிகைப் பூ கூடைகளில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளில் ஒன்று தான் வெடித்திருக்கக்கூடும்: அனைவரும் வரிசையாக வடக்குப் பக்கம் திரும்பி நின்று கொண்டிருந்தபோது இந்த இருவர் மட்டும் தெற்குப் பக்கமாகத் திரும்பி நின்றனர்:

## பதினாறு சடலங்கள் மீட்பு

இந்த இருவரில் ஒருபெண்ணின் தலைதுண்டிக்கப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அதோடு 16 சடலங்களில் இன்னும் இரண்டு சடலங்கள் அடையாளம் காணப்படவில்லையென தெரிவித்தார்.

## இன்னும் ஆறு நாட்களில்

திரு. ராஜீவ் காந்தியின் பாட்டனார் திரு ஜவர்ஹர்லால் நேரு மறைந்து, 27ம் ஆண்டு நிறைவு நாள் எதிர்வரும் 27ம் திகதியாகும் இதற்கு இன்னும் 6 நாள் இருக்கையிலேயே திரு ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டார்.

## சோனியா காந்தி காங்கிரஸ் தலைவர்

(புதுடில்லி)

திருமதி சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராக ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நேற்று மாலை புதுடில்லியில் கூடிய காங்கிரஸ் கட்சியின் செயற்குழு அறிவித்துள்ளது.

திரு. பி. வி. நரசிம்மராவின் தலைமையில் கூடிய இ: காங்கிரஸ் கட்சியின் கமிட்டி உறுப்பினர் 12 பேரும் மற்றும் 6 நிரந்தர உறுப்பினர்களும் கலந்துகொண்டு இம்முடிவை ஏகமனதாய் மேற்கொண்டனர். (பூ)

## ராஜீவ் வென்றால் மீண்டும் தேர்தல்

(புதுடில்லி)

அமேதி தொகுதியில் தேர்தல் நடைபெற்று முடிந்துவிட்டது. அங்கு திரு. ராஜீவ் காந்தி வெற்றிபெற்றால் அத்தொகுதியில் மீண்டும் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு: ராஜீவ் காந்தி வெற்றி பெறும் பட்சத்தில் சத்தியப்பிரமாணம் செய்ய முடியாத ஒரு நிலைமைக் கருதியே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்தது.

## யார் கொலையாளிகள்? எதுவும் தெரியாது

(சென்னை)

திரு. ராஜீவின் கொலை குறித்துத் தாம் எதுவும் கூற முடியாதென்றும், இக்கொலைக்குப் பின்னணி யார் என இதுவரை எவர் மீதும் சந்தேகிக்கப்படமுடியாத நிலையில் உள்ளதாகவும் சென்னைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணையின் பின்னரே கொலையாளிகள்

(4ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்காந்தி கொல்லப்படவேண்டியவர்

(லண்டன்)

திரு. ராஜீவ்காந்தியின் இறப்பு தவிர்க்கப்படமுடியாதது. அவர் கொல்லப்படவேண்டியவரே என லண்டனிலுள்ள சீக்கியர்களின் 'காலிஸ்தான் முன்னணி' அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதேவேளை ராஜிவ் காந்தியின் இறப்பு இயற்கையாக நிகழ்ந்த நீதி என 'காஷ்மீர் முஸ்லிம் போராளிகள் குழு' ஒன்று கூறியுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## கணிதம்

O/L 90 91 கணித மீட்டல் வகுப்புகள் ஆரம்ப அறிவில் இருந்து விசேட சித்தி அதி விசேடசித்தியடைய பலவருட அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி திருநெல்வேலி.
சி 4763

## விற்பனைக்கு

குளியலறை, மலசலகூடம், கழிவுநீர்த்தொட்டி கண்ணாடி இவற்றின் அழுக்ககற்றிப் பளிச்சிடும் வெண்மை பெற மில்க்வைற் திரவசவர்க்காரம் அரைப்போத்தல் ரூபா: 45/- மட்டுமே. எங்கும் விற்பனையாகிறது! மில்க்வைற்.
ஏ 1317

## பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள் கொப்பிகள், சஞ்சிகைகள், பேப்பர், போத்தல் பித்தளை செப்பு கோழிச்சீன் வெற்றுப்பைகள் வாங்கப்படும் விற்கப்படும் சேனுதிராசா, 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
சி 4755

## வேலைவாய்ப்பு

மாதந்தோறும் ரூ. 6000/- வருமானம் தரும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்! ஓய்வுநேரத்திலேயே உழைத்து முன்னேற்றம் காணுங்கள்! மாணவர்களும்பெரியவர்களும் பயனடைகிறார்கள். சுயவிலாசம் எழுதப்பெற்று முத்திரை ஒட்டப்பட்ட கவருடன் விண்ணப்பியுங்கள்: விளம்பர இல: 4740 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-4740]

## கொம்பியூட்டர் வகுப்பு

COMPUTER-BASIC வகுப்புகள் - புதிய பிரிவு ஆரம்பம் 24-05-91 வெள்ளி காலை 10-30மணி மற்றும் I C M A ; I D.P.M, I.A.B., Shorthand & Typing வகுப்புகளும் ஆரம்பமாகிக் கொண்டிருக்கின்றன. School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna.
சி 4760

## கரை ஒதுங்கிய இளைஞரின் சடலம்

(புங்குடுதீவு)

நயினாதீவுக் கடற்கரையில் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன், தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

நயினாதீவு கிழக்குக் கடற்பகுதியில் கடந்த 17ந் திகதி இச்சடலம் கரை ஒதுங்கியது. (101)

## குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகள் மீது நேற்று முன்தினம் 3 பொம்மர்கள், 2 அவ்ரோ, 2 ஹெலிகள் ஆகியன ஒன்றிணைந்து பெரும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

இத்தாக்குதல் காலை 7-00 மணி முதல் மாலை 5-30 மணி வரை நீடித்ததாகக் கூறப்படுகின்றது. [வி]

## ஒரு கிலோ மா 24 ரூபா

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடைகளில், நேற்று முன்தினம் முதல் ஒரு கிலோ மா 24 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டுவருகிறது. (61)

# இரு தடவைகள் தப்பியவர் மூன்றுவது முறை பலி

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி 1944-ஆண்டு 20-ம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் திரு பெரோஸ் காந்திக்கும், இந்திரா காந்திக்கும் முதற் பிள்ளையாக பம்பாயில் பிறந்தார்.

அப்போது அவரது தாத்தா ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்தார். ராஜீவைப் பாரதத்தின் நாற்பதுகோடியே ஒன்றுவது இந்தியர் என திரு. ஜவஹர்லால் நேரு வர்ணித்தார்.

பழகுவதற்கு இனிமையாகவும், நடத்தையில் கண்ணியமாகவும் விளங்கிய ராஜீவ் காந்தி புகழ்மிக்க டேராடூன் பள்ளியில் கல்வி பயின்றார். அதன் பின்னர் லண்டனிலுள்ள ரினிட்டிக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல் படித்தார்; அங்குதான் தமது 20-வது வயதில் சோனியாவைச் சந்தித்தார்.

இந்தியன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தில்பைலட்டாக சேர்ந்து தொழில் நுட்ப விபரங்களைத் தெரிந்துகொள்வதில் வல்லவர் என்று புகழ்பெற்றார்.

1980 ம் ஆண்டு இளைய சகோதரரான சஞ்சய் காந்தி விமான விபத்தில் உயிரிழந்த போது அன்னைக்கு உதவியாக வேறு வழி இல்லாமல் அரசியலுக்கு வந்தார். பின்னர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளரானார். அமேதி தொகுதியில் அமோக வெற்றிபெற்றார்.

1984 இல் திருமதி இந்திரா காந்தி கொலைசெய்யப்பட்ட போது பிரதமர் பொறுப்பை ஏற்ற அவர் கட்சியின் தலைவராகவும் பணியாற்றினார்.

புதுடில்லியில் மகாத்மா காந்தி சமாதியில் அஞ்சலி செலுத்த 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் திகதி அவர் சென்றபோது அவரைக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றது.

இதேபோல் இலங்கைத் தலைநகர் கொழும்பில் அவர் உயிரைப் பறிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மயிரிழையில் உயிர்தப்பினார்.

இவ்விரு சம்பவங்களிலும் தப்பித்த ராஜீவ் காந்தி முகத்தில் எந்தவித சலனத்தையும் காட்டாது கண்ணியத்தை கடைப்பிடித்து கம்பீரத்துடன் திகழ்ந்ததை உலகமே போற்றியது.

# புலிகள் மீது அமைச்சர்சந்தேகம்

(புதுடில்லி)

திரு. ராஜீவ் காந்தியின் கொலைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருக்கலாமென மத்திய பாதுகாப்பு இணையமைச்சர் திரு. சுபேத் கான் சஹாய் தெரிவித்துள்ளார்.

எனினும் இது உறுதிப்படுத்தாத ஒன்றென்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை இக்கொலை குறித்து பொலிஸார் பல சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

சீக்கிய தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் திரு. ராஜீவின் பெயர் முதலிடத்திலிருப்பதால் அவர்கள் கொன்றிருக்கலாம் அல்லது தேர்தலைக் குழப்பும் நடவடிக்கையில் நக்ஸலைட்டுகள் ஈடுபட்டுவருவதால் அவர்கள் கொன்றிருக்கலாம் அல்லது குண்டு வெடிப்புகளில் புகழ்பெற்ற விடுதலைப் புலிகள் கூட இதனைச் செய்திருக்கலாமென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விடுதலைப் புலிகள் முற்றாக மறுப்பு

(லண்டன்)

திரு. ராஜீவ் காந்தியின் படுகொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென லண்டனிலிருந்து புலிகள் பேச்சாளர் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

புலிகள் இக்கொலையைச் செய்திருக்கக் கூடுமென அமைச்சர் திரு. சுபேத் கான் சஹாய் தெரிவித்ததற்கே புலிகள் தமது மறுப்பை தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இச்செய்தியை பல நாடுகளின் செய்தி ஸ்தாபனங்களும் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பி வருகின்றன. எனினும் இதுவரை யார் இக்கொலையை செய்தார்கள் என்பது பற்றியதகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# குண்டு வெடிப்பில் முரண்பட்ட தகவல்

(புதுடில்லி)

திரு ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்ட குண்டுவெடிப்புச்சம்பவம் குறித்து மாறுபட்ட பல தகவல்கள் வெளிவந்துள்ளன.

மக்களிடையே மாலை மரியாதையைப் பெற்றவண்ணம் நடந்து சென்றபோது பின்பகுதியில் இருந்து குண்டு வெடித்ததாக ஒரு செய்தியும், அவருக்கு ஒரு இளம் பெண் வழங்கிய பெரியதொரு பூச்செண்டிலிருந்து குண்டு வெடித்ததாக மற்றொரு செய்தியும், இரண்டு பூக்கூடைகள் தாங்கியவண்ணம் அவர் மீது இரு பெண்கள் பூக்களைத் தூவியவண்ணமிருந்த போது பூக்கூடை ஒன்றினுள் இருந்து குண்டு வெடித்ததாக மற்றொரு செய்தியும்,

அவருக்கு மாலை அணிவிக்கப்பட்டபோது 7-வது மாலை போடும்போது அவ்விடத்தில் குண்டு வெடித்ததாகவும் தெரிவிக்கின்றன.

# ராஜீவ் மரணச் செய்தியால் சோவியத் மக்கள் அதிர்ச்சி

(மாஸ்கோ)

சோவியத்யூனியனில் ராஜீவ் மரணசெய்தியை மக்கள் துயரத்துடன்கேட்டார்கள் சோவியத் தொலைக்காட்சியில்ராஜீவ் மரணம் ராஜீவின் படத்துடன் ஒலிபரப்பப்பட்டது.

காமன்வெல்த் தலைமைச் செயலர் திரு. அமேச்சா ராஜீவின் மரணம் குறித்த கவலை தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்ஸன் மண்டேலா உட்பட பல உலக அரசியல் தலைவர்கள் பெரும் அதிர்ச்சியுட் கவலையும் வெளியிட்டுள்ளனர். (க)

# உலகத் தலைவர்கள் பெரும் அதிர்ச்சி

(புதுடில்லி)

திரு. ராஜீவ் காந்தியின் படுகொலை செய்தியைக் கேட்டு உலகத் தலைவர்கள் பெரும் அதிர்ச்சியைத் தெரிவித்துள்ளனர். முதலில் அமெரிக்க அதிபர் புஷ்ஷும், அடுத்து சோவியத் அதிபர் கொர்பச்சேவும் பின் பல தலைவர்களும் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா பாகிஸ்தான், இலங்கை உட்படப் பல நாடுகளின் தலைவர்களும் தமது இரங்கல் செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

பல நாடுகளின் தலைவர்களும் தமது அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டுவருகிறார்கள்.

# 20பேர் பலி, 50பேர் காயம்

(சென்னை)

திரு காந்தியுடன் தமிழக பொலிஸ் அதிபர் மற்றும் அதிஉயரதிகாரிகளும், ராஜீவின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரும், ஒருபெண் கான்ஸ்டபிளும் ஒரு பொலிஸ்காரரும் கொல்லப்பட்டனர்.

மேலும் 12 பொதுமக்களும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர். 50பேர் வரை படுகாயமடைந்தனர். பலரது நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இச்சம்பவத்தில் காங்கிரஸ் ஸ்ரீ பெரம்பத்தூர் தொகுதி வேட்பாளர் திருமதி மரகதம் சந்திரசேகர் படுகாயமடைந்துள்ளார்.

# அமெரிக்காவிலிருந்து மகன் ராகுல் விரைவு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் கல்விகற்று வரும் ராஜீவின் புதல்வர் ராகுல் காந்திக்கு (20வயது) நள்ளிரவு துயரச்செய்திஅனுப்பப்பட்டது

இதேவேளை இத்தாலியில் திருமதி சோனியா காந்தியின் குடும்பத்திற்கும் இச்செய்தி அனுப்பப்பட்டது.

வடமாநிலத்தில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த காந்தி குடும்பத்தின் நெருங்கிய நண்பரும் திரு. ராஜீவின் பால்ய நண்பருமான நடிகர் அமிதாப்பச்சன் மயங்கிவிழுந்ததாகவும் சில மணிநேரத்தின் பின் மயக்கம் தெளிந்த நிலையில் கூழறி அழுதவண்ணமிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

# சீனாவின் நண்பர்

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தெரிவிக்கையில் திரு. ராஜீவ்காந்தி சீனாவின் ஒரு நண்பர் என்று கூறியிருக்கிறது.

ராஜீவின் கொலை பற்றிய செய்தி கிடைத்தவுடன் நேபாள மக்கள்பெரும் அதிர்ச்சியடைந்துள்ளதாகக் காட்மண்டுவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொர்பச்சேவ் அனுதாபச் செய்தி

(புதுடில்லி)

ராஜீவின் கொலைகுறித்து சோவியத் அதிபர் கொர்பச்சேவும் அவரது மனைவியும் ஜனாதிபதிவெங்கட் ராமனுக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் இந்த இரக்கமற்றதுள்ளார்.

கொடூரமான செயலினால் எமது மனம் கோபத்தால் கொதிக்கிறது என்று தெரிவித்துள்ளனர்.

திருமதி சோனியா காந்திக்கு தனிப்பட்ட முறையில அனுப்பியுள்ள செய்தியில் திரு ராஜீவ் நண்பர் என்றும் திரு. கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

# 7 நாள் துக்கதினம்

(புதுடில்லி)

ராஜீவின் கொலைக்கு அஞ்சலி தெரிவித்து இந்தியா முழுவதும் 7 நாள் துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நாடெங்கும் விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல மாநிலங்களும் இது குறித்து துக்கதினம் பற்றிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

# ஜூன்மாதம் நடுப்பகுதிவரை தேர்தல் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

திரு. ராஜீவ் காந்தியின் மறைவையடுத்து 23-ம் திகதியும், 26-ம் திகதியும் நடைபெறவிருந்த இரண்டாம், மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குப் பதிவுகள் அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இன்று நடைபெறவிருந்த வாக்குப்பதிவு அடுத்த மாதம் 12-ம் திகதிக்கும் 26-ம் திகதி நடைபெறவிருக்கும் வாக்குப் பதிவு அடுத்த மாதம் 15-ம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு. ரி. என். சேஷன் தெரிவித்தார்.

இதற்கான சகல அறிவுறுத்தல்களும்உடனடியாக சகல பகுதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இராசி பலன்

**23-05-1991**

**வியாழக்கிழமை**

தசமி பி. ப. 3-05 வரை; உத்தரம் மு. இ. 6-45 வரை; மரணயோகம் இராகுகாலம் பகல் 1-22 முதல் 2-52 வரை; சுபநேரம் இரவு 7-22 முதல் 8-52 வரை.

மேடம்: புறம் பேசுதல், முன்கோபம் தெய்வீக வழிபாடு.

இடபம், ஏமாற்றம், அசட்டுத் தைரியம், தொழில் முடக்கம்.

மிதுனம், குடும்பக் கலகம், மனமுடை, அநாவசியச் செலவு.

கடகம்; இனிய வாழ்வு, நண்பர் சகாயம், தானதர்மம்.

[4-ம் பக்கம் பார்க்க]

★ ராஜீவ்காந்தி படுகொலை எதிரொலி

# இந்தியா முழுவதும் கலவரம்

# எதிர்க்கட்சியினர்மீது தாக்குதல்!

## தமிழகத்தில் ஊரடங்கு; பஸ்கள் தீக்கிரை கட்டடங்கள், வாகனங்கள் எரிப்பு

(புதுடில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் திரு: ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட செய்தியை அடுத்து இந்தியாவின் பல மாநிலங்களிலும் பெரும் கலவரம் வெடித்துள்ளது. இதுவரை இக்கலவரத்தில் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். தமிழகத்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு வன்முறையில் ஈடுபடுவோர்மீது கண்டதும் சுடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் பாண்டிச்சேரியில் இச்செய்தி கேள்விப்பட்டதும் காங்கிரஸ் தொண்டர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பெரும் வன்முறையில் ஈடுபட்டனர். பாண்டிச்சேரியில் முன்னாள் முதல்வர் திரு. டி. ராமச்சந்திரன் வீடு முற்றாக சேதப்படுத்தப்பட்டது.

### கருணாநிதி 'கட்அவுட்' எரிப்பு

இவ்விரு மாநிலங்களிலும் பாரிய அளவில் வைக்கப்பட்டிருந்த தி. மு. க தலைவர் திரு கருணாநிதியினதும் தி. மு. க. தலைவர்களதும் 'கட் அவுட்'கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

### தி. மு. க. தலைவர்களின் வீடுகள் சேதம்

தமிழகத்தில் பஸ்கள், கார்களை, கடைகள், வீடுகள் கொளுத்தப்பட்டு வருகிறது. தி. மு. க. தலைவர்கள் வீடுகள் பலவும் தாக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு, பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

### கண்ட இடத்தில் சுட உத்தரவு

வன்முறையில் ஈடுபடுவோர் மீது கண்டதும் சுடுமாறு தமிழக பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலதிகமாக இராணுவமும் வரவழைக்கப்பட்டுள்ளது. இதேவேளை உத்தரபிரதேஷ், பீஹார், ஹரியானா, மத்திய பிரதேஷ் மற்றும் பல மாநிலங்களில் பெரும் கலவரம் வெடித்துள்ளது.

### பஸ், ரயில் சேவைகள் ரத்து

பல மாநிலங்களிலும் பஸ் ரயில் போக்குவரத்து மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் வன்முறை அதிகரித்துள்ளதால் இம்மாநிலத்திற்கு இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மாலை விழுந்தபோது குண்டு வெடித்தது

திரு. ராஜீவ் காந்தி தமது காரிலிருந்து இறங்கி அருகே இருந்த அன்னை இந்திராவின் சிலைக்கு மாலையணிவித்து அஞ்சலி செலுத்திவிட்டு மக்களின் அன்புப்பிரதிபலிப்புக்களை ஆமோதித்தவாறே ஏற்றுக்கொண்டே நடந்தார். ஆறு அல்லது ஏழு மாலைகள் அவர் கழுத்தில் விழுந்திருக்கும். 7-வது மாலை விழுந்தபோது அவரின் பின்புறமாக ஏதோ ஒன்று பெரிய சத்தத்துடன் வெடித்து அக்கினிக்குழம்பு 15 அடி உயரம் வரை மேலோங்கிக்கிளம்பியது என்றும் ராஜீவ் காந்திக்கு அருகே நின்ற இந்திய வானொலி நிருபர் இரத்தம் தோய்ந்த உடையுடன் தெரிவித்தார். 7 சடலங்கள் நீண்டநேரம் அங்கேயே கிடந்தன. உடனடியாக அப்பகுதியை காவல்துறையின் சுற்றிவளைத்துக்கொண்டனர்.

### நிலைகுலைந்து வீழ்ந்தார்

இக்குண்டு வெடித்தபோது எந்த ராஜீவ்காந்திக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டனவோ அத்தடுப்புக்களிலேயே ராஜீவ் காந்தி நிலைகுலைந்து விழுந்தார்.

ராஜீவின் மெய்க்காப்பாளர், தமிழக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒரு பொலிஸார், ஒரு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரும் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்கள்.

### மூதாட்டி பலி

ஒரு மூதாட்டி ராஜீவ் காந்தி மீது தாங்கொணா பாசம் கொண்டு அவரை நோக்கி இருகரங்களையும் நீட்டிய சமயத்தில் குண்டு வெடித்த போது அம்மூதாட்டியின் உடலும் சுக்கு நூறாக சிதறியது. ராஜீவின் பூதவுடல் உடனடியாக சென்னை பொது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டது.

### எலும்பும் தோலும்

பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த ராஜீவின் இளமை ததும்பும் அழகிய உடல் சிதைந்துபோய் காணப்பட்டது. தலை எது முகம் எது என்று கண்டுபிடிக்க முடியாதளவுக்கு அவரது முகம் பெரும் இரத்தமும் எலும்பும்தோலுமாய் தோற்றம் காட்டியது. தாமரைப் பூவின் இதழ்களை பிய்த்து கொட்டியதைப் போல அவரது தலையின் பின் பகுதி எலும்புகள் காணப்பட்டன.

### வாழப்பாடி தகவல்

தமிழக காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தகவல் தெரிவிக்கையில்; இரு பெண்கள் தனித்தனியே கூடைகளில் மலர்களை வைத்திருந்ததாகவும், அவற்றை அவர்கள் ராஜீவிடம் நீட்டியபோது குண்டுவெடித்ததையும் சுட்டிக்காட்டி இக்கூடைகளில் ஒன்றில் குண்டு வைக்கப்பட்டிருக்கலாமென்றும் தெரிவித்தார்.

ராஜீவின் சடலம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து நேற்றுக்காலை 7-15 மணியளவில் படைவிமானம் ஒன்றில் புதுடில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அவரது துணைவியார் திருமதி சோனியாவும், புதல்வி பிரியங்காவும் வேறு உயரதிகாரிகளும் டெல்லியிலிருந்து மீனம்பாக்கம் வந்து விமான நிலையத்தில் ராஜீவின் பூதவுடலை பெற்றுக்கொண்டனர்.

### கொலை பயமுறுத்தலும் எச்சரிக்கையும்

(புதுடில்லி)

கடந்த 16ந் திகதி பம்பாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்ற புறப்படுகையில் திரு. ராஜீவ் காந்திக்கு தொலைபேசிமூலம் கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதும், எனினும் திரு. காந்தி அதனை புறக்கணித்ததும் தெரிந்ததே.

இதேவேளை பீஹாரில் உள்ள ஞானி ஒருவரை திரு. காந்தி தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்க முதல் பார்க்கச் சென்றதும் அவரை தரிசித்த தலைவர்கள் பலர் அகாலமரணமானதை காந்தியின் ஆதரவாளர் பலர் சுட்டிக்காட்டியபோதும் அவர் அதை புறக்கணித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### மகள் தாய்க்கு ஆறுதல்

திருமதி சோனியா காந்தி பிரமித்து செய்வதறியாது திகைத்து நின்றார். தாய் மகளுக்கு ஆறுதல் சொல்வதற்குப் பதிலாக மகள் பிரியங்காவே அன்னைக்கு ஆறுதல் சொல்லும் அவலநிலை ஏற்பட்டதாகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமரர் ராஜீவின் துணைவியார் சோனியா காந்தி எது நடக்கப்போகிறது என்று பயந்தாரோ அச்சம்பவம் நடந்து முடிந்துவிட்டது.

### பதவி ஏற்கவேண்டாம்

1984-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அன்னை இந்திரா துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான போது திரு. ராஜீவ் பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்று கட்சி விரும்பியது. ஆனால் இந்திராவுக்கு ஏற்பட்ட நிலைமை ராஜீவுக்கும் ஏற்படலாம் என்று அஞ்சி அவரது துணைவியார் ராஜீவை அப்பொறுப்பை ஏற்கவேண்டாம் என்று கூறியதாகவும் ஆனால் ராஜீவோ இப்பொறுப்பை தான் ஏற்கவேண்டிய சூழ்நிலையைத் தெரிவித்ததாகவும் தமிழக முன்னாள் ஆளுநரும் அப்போதைய பிரதமர் இந்திராவின் செயலாளருமான டாக்டர் அலெக்ஸாண்டர் தமது நினைவுக்கட்டுரையில் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கொலை காட்டுமிராண்டித்தனமானது என குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் கண்டனம் தெரிவித்தார். தமது துயரத்தை முழுமையாக வெளியிட வார்த்தைகள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### மக்கள் கண்ணீர் வடித்தனர்

ராஜீவின் பூதவுடல் விமானத்திலிருந்து இறக்கும் சமயம் அங்கு திரண்டிருந்த மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளித்ததாகச் செய்தியாளர்கள் பலர் தெரிவித்தனர்.

### கலைஞர் கருணாநிதி ஆழ்ந்த அனுதாபம்

(புதுடில்லி)

ராஜீவின் இறுதிச்சடங்குகள் குறித்து காங்கிரஸ் செயற்குழு இறுதிமுடிவு செய்யும் முகமாக நேற்றுக்காலை கூடி ஆராய்ந்தது.

மேற்குவங்க முதலமைச்சர் ஜோதிபாஸ், அடல்பிஹாரி வாஜ்பாய், தமிழக ஆளுநர், பர்னாலா நாராயணசாமி முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் ஜி. கே. மூப்பனார் உட்பட பல தலைவர்கள் பெரும் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் அனைத்து பஸ் சேவைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. கல்விக்கூடங்கள் அரச அலுவலகங்கள் ரயில்வே சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. நிலைமை அவதானிக்கப்பட்டபின் மீண்டும்சேவைகள் ஆரம்பிப்பது பற்றி தெரிவிக்கப்படுகிறது.

தி. மு. க. தலைவர் திரு: மு. கருணாநிதி திரு. ராஜிவ்காந்தி கொலை செய்யப்பட்டது குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

### ஜப்பான் கவலை

ஜப்பானுக்கும் பாரதத்திற்கும் இடையே நெருங்கிய நட்புறவு நிலைகளை வளர்ப்பதற்கு திரு ராஜீவ்காந்தி பாடுபட்டார் என ஜப்பானிய பிரதமர் திரு: கைபு(?) கூறியிருக்கிறார்.

## யார் இந்தப் பெண்கள்?

இக்குண்டு வெடிப்பிற்குக் காரணமானவர்கள் எனக் கருதப்படும் இரு பெண்களும் யார் என இதுவரை தெரியவரவில்லை. இவர்கள் பற்றித் தீவிர புலன் விசாரணை நடைபெற்றுவருகிறது. இப்பெண்கள் இந்தியா அல்லது இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமெனவும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## படைகளுக்கு கூடுதல் அதிகாரம்

இந்தியா முழுவதும் சுமார் 30 லட்சம் இராணுவத்தினரும் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட படையினரும் மிகுதி சுமார் 30 லட்சம் பரா இராணுவமும், துணைப்படை, ஏனைய படைகளும் முழு உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. வன்முறையை 'இரும்புக் கரம்' கொண்டு அடக்குமாறும் அமைச்சரவை, சகல படைகளுக்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்கியுள்ளது.

பல மாநிலங்களிலும் வன்முறையாளர்கள் மீது கண்டதும் சுடும் உத்தரவும் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பத்திரிகையாளர் தாக்கப்பட்டனர்

திரு. ராஜீவின் பூதவுடல் புதுடில்லி விமான நிலையம் வந்தபோது அங்கு நின்றவர்களால் சர்வதேச பத்திரிகையாளர்கள் பலர் சி. ஐ. ஏ. எனத் தாக்கப்பட்டனர். எனினும் இது குறித்துத் தாம் கவலை கொள்ளவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## இறுதிச் சடங்கில் உலகத் தலைவர்கள்

ராஜீவ்காந்தியின் இறுதிச் சடங்குகள் நாளை வெள்ளிக்கிழமை அரசமரியாதைகளுடன் நடைபெறும். இந்திராகாந்தியின் உடல் தகனம் செய்யப்பட்ட இடமான சக்தி இடல் என்ற இடத்தில் ராஜீவின் இறுதிச் சடங்குகளும் இடம்பெறும்.

தீன்மூர்த்தி பவனிலிருந்து ராஜீவின் உடல் பீரங்கி வாகனத்தில் வைக்கப்பட்டு முப்படையின் அணிவகுப்புடன் இறுதிக்கிரியைகள் நடைபெறும் இடத்திற்கு எடுத்துவரப்படும். இறுதிச் சடங்கில் அமெரிக்க துணை ஜனாதிபதி திரு. டாம் குயில், பிரிட்டிஷ் வெளிவுறவு அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேட், பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷெரீப், பங்களாதேஷ் ஜனாதிபதி பேகம்காலிதா ஷியா, நிக்கரகுவா முன்னாள் அதிபர் டானியல் ஒட்டேகா, பூட்டான் அதிபர் உட்படப் பல உலகத் தலைவர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

## மேனகாகாந்தி புதுடில்லி விரைந்தார்

சுற்றுப்புறச் சூழல் இராஜாங்க அமைச்சர் திருமதி மேனகா காந்தி, ராஜீவின் மரணச் செய்தி கேட்டு, உத்தரப் பிரதேசத்தில் இருந்து புதுடில்லி விரைந்தார்.

ராஜீவின் உடல் வைக்கப்பட்டிருந்த அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிலையத்திற்குச் சென்று, திருமதி சோனியா காந்திக்கும், மகள் பிரியங்காவுக்கும் திருமதி மேனகா காந்தி தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டார்.

திருமதி சோனியா காந்தியின் தாயாரும், சகோதரியும் ராஜீவ் காந்தியின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக இன்று புதுடில்லி வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

ராஜீவ் காந்தியின் உடல் வைக்கப்பட்டிருந்த தீன்மூர்த்தி பவனில் • பல பாகங்களிலும் இருந்துவந்த மக்கள் உடலைப் பார்க்க முற்பட்டபோது அந்த நெரிசலில் ராஜீவ் காந்தியின் வீட்டுக்கதவு, யன்னல், மதில்கள் சேதமடைந்தன. இவர்களை இராணுவம் கண்ணீர் புகைக்குண்டுவீசிக் கலைத்தனர்.

## இலங்கை படை உஷார் நிலையில்

திரு. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதையடுத்து, இலங்கை கடற்படை உசார்படுத்தப்பட்டுள்ளது.

திரு. ராஜீவின் கொலையில் தமிழ் போராளிகள் சந்தேகிக்கப்படுவதால் அவர்கள் தப்பி இலங்கைக்கு வரமுற்பட்டால் மடக்கிப் பிடிக்கவே இலங்கை கடற்படை உசார்ப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரி கொழும்பில் கூறினார்.

திருமதி சோனியா காந்தியை இ. காங்கிரஸ் கட்சியின் தலைவராக தெரிவுசெய்ததை பாரதிய ஜனதா கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் "வங்குரோத்து" நிலைமையும், ஒரே குடும்பத்தில் தெரிவு செய்யும்கொள்கையும் கண்டிக்கப்பட வேண்டியதே என பா. ஜ. கட்சியின் முக்கியஸ்தர் தெரிவித்தார்.

## தோல்வியில்முடிந்தராஜீவின் ஒப்பந்தங்கள்

1984ல் பதவிக்கு வந்த திரு. ராஜீவ் காந்தி நான்கு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தார். அதில் மூன்று, பயனற்றுத் தோல்வியில் முடிவடைந்தன.

பஞ்சாப், அஸாம், இலங்கை தொடர்பாக ராஜீவ் மேற்கொண்ட ஒப்பந்தங்கள் படுதோல்வி அடைந்தன. இதனால் திரு. ராஜீவ் பெரிதும் அவமானப்பட்டார்.

மாலைதீவில் சதிப்புரட்சியை முறியடித்த போதும் அங்கிருந்தும் இந்தியப்படைகள் பலவந்தமாகவே வெளியேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## 3 காவலரண்கள் புலிகளால் தகர்ப்பு

(வவுனியா)

வவுனியாவில் தந்திரிமலை இறிலங்கா இராணுவ முகாமைச் சூழ 500 யார் தொலைவில் அமைந்திருந்த மூன்று இராணுவக் காவலரண்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள், இக்காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதலை அடுத்து, 3 காவலரண்களிலும் நின்ற இராணுவத்தினர் பின்வாங்கி இராணுவ முகாமுக்குள் ஓடியதைத் தொடர்ந்து இக்காவலரண்கள் மூன்றும் விடுதலைப் புலிகளினால் நிர்மூலமாக்கப்பட்டன. (வி)

## திரையரங்கு தீக்கிரை

(புதுடில்லி)

தமிழகத்தில் இப்படுகொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ள தால் தென் மாநிலங்களில் பெரும் கலவரம் நடைபெற்று வருகிறது. ஆந்திரா முன்னாள் முதல்வரும் தேசிய முன்னணி தலைவருமான திரு. என். ரி. ராமராவுக்கு சொந்தமான இரு திரையரங்குகள் ஹைதராபாத்தில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

### இலங்கைக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும், இலங்கைத் தரப்புக்கும் தொடர்புஇருக்கக்கூடுமென்று பி. பி. ஸி. சந்தேகிக்கப்படுகிறது.

## ராகுல் இன்று வருகிறார்

(புதுடில்லி)

திரு. ராஜீவின் மகன் ராகுல் காந்தி இன்று காலை அமெரிக்காவிலிருந்து நாடு திரும்புவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது. தந்தையின் பூதவுடலுக்கு இவர் தீமூட்டுவார். தேர்தல் பிரசாரம் ஆரம்பமானபோது ராகுல் இந்தியாவில் நின்றதும் குறிப்பிடத்தக்கது.

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

தச்சன் காட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரவேங்கை கிரிதரன் [முத்துலிங்கம் ரேதீஸ்வரன் - யாழ்ப்பாணம்] வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தங்கள் வீரவணக்கத்தை தெரிவித்தனர். (வி)

### இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கம்: மேலோர் நட்பு, தொழில் முயற்சி, பாராட்டு.

கன்னி: இனிய வார்த்தை, அறப்பயுத்தி, குடும்ப சுகம்.

துலாம்: சத்துருபயம், மனைவியால் சுகம், தாழ்மையான தினம்.

விருச்சிகம்: தன லாபம், பதவி உயர்வு, காரிய அனுகூலம்.

தனுசு: வாய்வுப் பிடை, அவநம்பிக்கை, சஞ்சாரம்.

மகரம்: பந்துவரவு, விஷபயம், ஸ்திரி விரோதம்.

கும்பம்: உடல்நலம் குன்றுதல், சுகமின்மை, மந்தநிலை.

மீனம்: புத்திரர் லாபம், தொழில் பாராட்டு, வெகுஜனத் தொடர்பு.

ஜோஸ்யர்.

## பெரும் திரளான மக்கள் அஞ்சலி

(புதுடில்லி)

திரு ராஜீவ் காந்தியின் இல்லத்தில் பெரும் திரளான மக்கள் அன்னாருக்கு மரியாதை செலுத்து முகமாக நேற்று குழுமியிருந்தனர். திரு. ராஜீவின் பூதவுடல் நேற்றுக்காலை 8-40 மணிக்கு புதுடில்லிக்கு வந்து சேர்ந்தவுடன் உடனடியாக அது அகில பாரத விஞ்ஞான கழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின் அங்கிருந்து அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. (ஸ)

### இலங்கை தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ராஜீவின் கொலைக்கு இலங்கை தமிழ் போராளிகளே காரணமெனக்கூறிடவுள்ள வாழப்பாடி இதன் காரணமாகவே இலங்கைத் தமிழர் அனைவரும் வெளியேற்றப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

### யார் கொலையாளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து எதுவும் தெரிவிக்கலாமெனவும், நன்குகத் திட்டமிட்டே 'தற்கொலைப் படை' முறையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## விசாரணைக் கமிஷன் நியமிக்க முடிவு

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி கொலை பற்றி விசாரணை செய்வதற்காக சுப்பிறிம் கோட் நீதிபதி தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

விசேடபொலிஸ்புலன்விசாரணைக்குழு ஒன்று டில்லியிலிருந்து இன்று காலை சென்னைக்கு விரைந்துள்ளது.

## டாங்கே காலமானார்

(புதுடில்லி)

முதுபெரும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான திரு டாங்கே பம்பாய் மருத்துவமனையில் நேற்று அதிகாலை காலமானார்.

இவரது மறைவு குறித்து ஜனாதிபதி உப ஜனாதிபதி ஆகியோர் அனுதாப செய்திகள் அனுப்பியுள்ளனர். (ஸ)

### ராஜீவ்காந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் இதில் ஈடுபடவில்லை எனக் கூறியுள்ள இவர்கள் இது நீதியானதொன்றெனவும் கூறியுள்ளனர்.

## 3-ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

### நகுலன் சனசமூக நிலையத் திறப்பு விழாவும்



### கப்டன் நகுலன்

(வேலுப்பிள்ளை - நகுலேஸ்வரன்)

தமிழீழ மண்ணில்: 30-11-66 தமிழீழ மீட்பில்: 24-05-91

எங்களது மண்ணில் எதிரிகளின் காலடிகள்
ஏற்குமோ தமிழா கிளர்ந்தெழுந்தான் "நகுலன்"
செங்குருதி சிந்திடவே போராட்டக் களத்தில்
செங்கதிரோன் எனவே ஒளியாகி நின்றான்.

குறிப்பு: கப்டன் நகுலனின் 3ம்ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும், சனசமூக நிலையத்திறப்பு விழாவும் நாளை இரவு 7-00 மணிக்கு நகுலன் வீதி மீசாலை வடக்கில் நடைபெறும்.

மீசாலை வடக்கு
சிற்றூரவை பகுதி மக்கள்

(ஏ-1328)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில்மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post office sriLaneka under Licence Number B/100306/81.